

கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களைப் பெற்ற விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் இந்தியா கூட்டணியின் வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா அறிமுகம் மற்றும் இந்தியா கூட்டணி செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் விக்கிரவாண்டியில் அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் கழக கொள்கை பரப்பு செயலாளர் எஸ் .ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வரவேற்புரையாற்றினார். அமைச்சர்கள் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, எஸ்.எஸ்.சிவசங்கர், சி.வெ.கணேசன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கூட்டணிக் கட்சித் தலைவர்கள் செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ, தொல் திருமாவளவன் எம்.பி, தி.வேல்முருகன் எம்.எல்.ஏ, சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி,சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் துரை ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல் சமது, சரவணன், ஜோதி, கிரி, அம்பேத்கர், மாநில மருத்துவர் அணி துணை செயலாளர் எ.வ.வே.கம்பன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர்கள் முருகன், இளந்திரையன், கற்பகம், கம்யூனிஸ்ட் கட்சி ராமமூர்த்தி, சரவணன், காங்கிரஸ் குலாம் மொய்தீன், விசிக பெரியார், திலிபன், பொன்னி வளவன், த.வா.க குமரன், ம.நே.ம.க முஸ்தாக், அஸ்கர் அலி, ம.நீ.மை நம்மவர் பாபு ஒன்றியச் செயலாளர்கள் மு.தங்கம், ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, கல்பட்டு இராஜா, ஜெ.ஜெயபால், க.மும்மூர்த்தி ஆர்.முருகன், ஆர்.பி.முருகன், ஒன்றிய குழுத் தலைவர்கள் கலைச்செல்வி , சங்கீதா அரசி ரவி துரை, பேரூராட்சி மன்றத் தலைவர் அப்துல் சலாம், பேரூர் செயலாளர் நைனா முகம்மது மற்றும் கழக நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## ‘சவால் விடும் அளவிற்கு

# தமிழ்நாட்டு மாணவர்கள் வளர வேண்டும் என்பதே என் கனவு’!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

“புதுமைப்பெண்” திட்டத்தை மிகவும் பாராட்டிப் பேசினார்கள். மாணவிகள் தங்களின் சிறிய சிறிய தேவைகளுக்கு யாரையும் எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய நிலை இனி இல்லை என்றும், இந்தத் திட்டத்தில் மாதா மாதம் கிடைக்கும் ஆயிரம் ரூபாய் தங்களின் தேவைக்கு உதவியாக இருப்பதாகவும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கூறினார்கள்.

**ஆகஸ்ட் மாதம் முதல் - மாணவர்களுக்கு ரூ.1000 வழங்கும் - ‘தமிழ்ப் புதல்வன் திட்டம்!’**

அந்த மகிழ்ச்சி மாணவர்கள் முகத்திலும் ஏற்பட வேண்டும் என்பதற்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற “தமிழ்ப்புதல்வன் திட்டம்” செயல்படுத்தப்படும் என்று சொல்லியிருந்தேன். நீங்கள் கல்லூரி சென்றவுடனே வருகின்ற ஆகஸ்ட் மாதத்திலிருந்து அந்த ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என இந்த மேடையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் கவனிப்பில், பள்ளிக்கல்வித் துறை ஒரு பொற்காலத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறது என்று பெருமையுடன் சொல்லலாம்.

**தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வித் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தும் அமைச்சர்!**

பல்வேறு நாடுகளுக்குச் சென்று, அங்கு இருக்கும் நவீன வசதிகளை நம்முடைய ஊரில், நம்முடைய பிள்ளைகளுக்காக அறிமுகப்படுத்தி செயல்படுத்த வேண்டும் என்று அமைச்சர் மிகவும் ஆர்வமாக இருக்கிறார். அதேபோல, நம்முடைய பள்ளி மாணவ, மாணவியர்களை வெளிநாடு சுற்றுலாவுக்கும் அதிக அளவில் அழைத்துக்கொண்டு செல்கிறார். தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித் துறையை உலகத் தரத்திற்கு உயர்த்தும் முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்கிறார். இப்படிப்பட்ட முன்னெடுப்பு களுக்கு அவருக்குத் துணையாக நிற்பது ஆசிரியர்கள் தான். அந்த ஆசிரியர்களைப் பாராட்ட வேண்டியது அரசினுடைய கடமை!

பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெற வைத்த 1,728 அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்களின் சாதனையை ஊக்கப்படுத்த அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட இருக்கிறது. தலைமை ஆசிரியர்களுக்கு வழங்குகிறோம் என்றால் அது அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கும் அங்கீகாரம்.

**மாணவர்களை வழி நடத்தும் ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுகள் - வாழ்த்துகள்!**

“100 விழுக்காடு தேர்ச்சி” என்று சொல்லிப் பாராட்டுவது மூலமாக அந்த இலக்கை அனைவரும் அடையவேண்டும் என்று ஊக்கப்படுத்துவதற்கு தான் இந்த விழா! அந்த வகையில், தேர்வு எழுதிய எல்லா மாணவர்களுக்கும், அவர்களை வழி நடத்திய ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துகளும். இதே சாதனையை அடுத்த ஆண்டு அனைத்துப் பள்ளிகளும் செய்ய வேண்டும்.

அடுத்ததாக, தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு பெற்ற மாணவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். எந்தப் பாடத்தில் நூறு மதிப்பெண் எடுத்தாலும் பாராட்டுக்குரியதுதான். ஆனால், நம்முடைய தாய்மொழி தமிழ். அதுவும் உயர்தனிச் செம்மொழி என்பதால், அதில் 100 மதிப்பெண் பெற்றவர்கள் சிறப்பான பாராட்டுக்குரியவர்கள்.

12ஆம் வகுப்பில் 35 பேரும், 10ஆம் வகுப்பில் 8 பேரும், தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு பெற்றிருக்கின்றனர். அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்படுகிறது.

**மாணவர்களின் மன நலனுடன் உடல் நலமும் முக்கியம்!**

அடுத்ததாக, கடந்த ஆண்டு தேசிய பள்ளி விளையாட்டுக் கூட்டமைப்பு நடத்தும் போட்டிகளில் கலந்துகொண்டு, 95 தங்கப் பதக்கங்களையும், 112 வெள்ளிப் பதக்கங்களையும், 202 வெண்கலப் பதக்கங்களையும் வென்ற மாணவர்களையும் மனதார நான் பாராட்டுகிறேன்.

ஜூன் 10 பள்ளிகள் திறந்தபோது, நான் போட்ட சமூக வலைதளப் பதிவில் கூட மாணவர்களின் மனநலனுடன் உடல்நலனும் முக்கியம் என்று சொல்லியிருந்தேன். அதற்கு விளையாட்டு மிகவும் முக்கியமான ஒன்று.

இந்தப் பதக்கம் பெற்றவர்கள், அடுத்து, உலக அளவிலான போட்டிகளில் பங்கேற்கவேண்டும். தம்பி உதயநிதி முன்னெடுப்பில், விளையாட்டிற்காக அதிகமான திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. அதை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்களில் இருந்து பல ஒலிம்பிக் சாம்பியன்கள் உருவாகவேண்டும் என்று வாழ்த்துகிறேன். இப்போது எல்லாமே இணையதளத்தில் இருக்கிறது. A.I. என்று சொல்லும் செயற்கை நுண்ணறிவு இப்போது பெரிய பேசும்பொருளாக ஆகியிருக்கிறது. புதிய வளர்ச்சிகளுக்கேற்ப நம்மை ‘அப்டேட்’ செய்துகொள்வது மிகவும் முக்கியம்.

பள்ளிக் கல்வித் துறையை நவீனப்படுத்த பேராசிரியர் அன்பழகனார் பெயரில் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். அதன்படி, தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணியாற்றும் 79 ஆயிரத்து 723 ஆசிரியர்களுக்கு ‘TAB’ என்னும் கையடக்கக் கணினி வழங்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் இதைப் பயன்படுத்தி, மாணவர்கள் விரும்பும் வகையில் கற்பித்தல் முறைகள் அமையும் என்று நம்புகிறேன்.

**வகுப்பறைகளை வண்ணமயமாக மாற்றும் - ‘ஸ்மார்ட் வகுப்பறைகள்!’**

அடுத்து, தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பள்ளிகளில் 22 ஆயிரத்து 931 ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்பட இருக்கிறது. வகுப்பறையை குழந்தைகள் மனதிற்குப் பிடித்த இடமாக வண்ணமயமாக மாற்ற, அங்கு ‘ஸ்மார்ட் போர்டு’ ஒன்றைப் பொருத்தப் போகிறோம். இங்கு இணையதள வசதியும் இருக்கும்.

**கீப் ரன்னிங், கீப் வின்னிங், கீப் ஷைனிங்!**

முதற்கட்டமாக, 500 ஸ்மார்ட் வகுப்பறைகளை இன்றைக்குத் துவக்கி வைத்திருக்கிறேன். இது எல்லாமே உங்களுக்காகத்தான். என்னுடைய ஆசையெல்லாம், உலகத்தில் எந்த ஊர் மாணவர்களுக்கும், என்னுடைய தமிழ்நாட்டு மாணவர்கள் சவால் விடுகின்ற அளவிற்கு வளர்ந்து இருக்கவேண்டும். அதுதான் என் கனவு. அதற்காகத்தான் இந்தத் துறையில் நிறைய திட்டங்களைக் கொண்டு வருகிறோம். நிதி நெருக்கடி எத்தனை இருந்தாலும், கல்வித்துறையில் நிறைய புதுப்புதுத் திட்டங்களைத் தொடங்குகிறோம் என்றால், உங்களுக்காகத்தான். மற்ற எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன். பதிலுக்கு, மாணவர்களான உங்களை நான் கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான்... படியுங்கள்.. படியுங்கள்.. படித்துக்கொண்டே இருக்க வேண்டும். எங்கும் தேங்கி நிற்காமல், முன்னோக்கி ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். உங்கள் கண்முன்னால் “ஃபுல் ஸ்டாப்” தெரியக் கூடாது. ‘கமா’ தான் தெரியவேண்டும். கீப் ரன்னிங். கீப் வின்னிங். கீப் ஷைனிங். MAKE TAMIL NADU PROUD!

**திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை!**

கல்விதான் உங்களிடமிருந்து யாராலும் திருட முடியாத ஒரே சொத்து. ஆனால், அதிலும் கூட, மோசடிகள் செய்வதை “நீட்” போன்ற தேர்வு முறைகளில் பார்க்கிறோம். அதனால்தான் அதைக் கடுமையாக எதிர்த்து வருகிறோம். “நீட்” போன்ற தேர்வுகள் மோசடியானவை என்று முதன்முதலில் கூறியது தமிழ்நாடுதான். அதை இன்றைக்கு இந்தியாவே சொல்லத் தொடங்கி இருக்கிறது. இந்த மோசடிக்கு நிச்சயம் ஒரு நாள் முடிவு கட்டுவோம். அது எங்கள் பொறுப்பு. மாணவச் செல்வங்களான நீங்கள் படிக்க சமூகமோ, பொருளாதாரமோ, அரசியல் சூழ்நிலையோ எதுவுமே தடையாக இருக்கக் கூடாது. அதுதான் என்னுடைய எண்ணம். அதுதான் இந்த திராவிட மாடல் ஆட்சியின் கொள்கை!

கல்வி எனும் நீரோடை தடங்கல் இல்லாமல் பாய்வதற்கு உங்களுடைய இந்த அரசு முழுமையாக ஆதரவாக நிற்கும்! அதை நீங்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எந்த கவனச் சிதறலும் இல்லாமல் படிக்கவேண்டும். “படிக்காமலும் பெரிய ஆள் ஆகலாம்” என்று யாரோ ஒன்று இரண்டு பெயரைப் பார்த்து தவறான பாதையில் செல்லாமல், கல்விதான் உண்மையான, பெருமையான அடையாளம் என்று புரிந்துகொள்ள வேண்டும்.

**நீங்கள் எல்லோரும் உலகை வெல்லும் ஆற்றலைப் பெற்றிடுவீர்!**

கல்வி இருந்தால் மற்ற எல்லாம் தானாக வரும். நீங்கள் எல்லோரும் உலகை வெல்லும் ஆற்றலைப் பெற்று, பகுத்தறிவோடு செயல்பட தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களின் குடும்பத்தில் ஒருவனாக இருந்தும் வாழ்த்துகிறேன்!

உங்கள் கனவுகள் மெய்ப்படட்டும்! ஆல் தி பெஸ்ட்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## ஆணவம் பிடித்தவர்களால் 241 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறமுடியவில்லை!

# பா.ஜ.க. மீது ஆர்.எஸ்.எஸ். கடும் தாக்கு!

புதுடெல்லி, ஜீன் 16–

பா.ஜ.க.வில் உள்ள ஆணவம் பிடித்தவர்களால் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 241 தொகுதிகளுக்கு மேல் பா.ஜ.க. வெற்றிபெறமுடிய வில்லை என்று ஆர். எஸ்.எஸ். கடுமையாகத் தாக்கியுள்ளது.

இது குறித்து பைனான் ஷியல் எக்ஸ்பிரஸ் இணைய தள இதழில் ‘ஆர்.எஸ்.எஸ்.தலைவர் பா.ஜ.க. மீது நேரடி தாக்கு’ என்று வெளியான செய்திக் கட்டுரை வருமாறு:-

பாரதிய ஜனதா கட்சிக்கும் அதன் சித்தாந்த வழிகாட்டிகளுக்கும் இடையே தீவிரமடைந்து வரும் பிளவின் அறிகுறிகளில், ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கத் தலைவர் இந்திரேஷ் குமார் காவி கட்சி எதிர்பார்த்ததை விட குறைவான மக்களவை தொகுதி எண்ணிக்கையை விமர்சிக்க முயன்றார், இது பகவான் ராமரின் தண்டனை என்று கூறினார். கட்சியினரின் “ஆணவம் தொடர்பாகவும், தேர்தல் முடிவுகள் தொடர்பாகவும், ஆர்.எஸ்.எஸ். தலைவர் ஒருவர் பா.ஜ.க. மற்றும் அதன் தலைமைக்கு எதிராக பகிரங்கமாக பேசுவது இதுவே முதல் முறை . “ராமரிடம் பக்தி செய்தவர்கள் படிப்படியாக ஆணவமடைந்தனர். அந்த கட்சி மிகப்பெரிய கட்சியாக அறிவிக்கப்பட்டது, ஆனால் அவர்களின் ஆணவத்தால் 241-க்கு மேல் வெல்ல முடியாமல் நிறுத்தப்பட்டது” என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் இந்திரேஷ் குமார் ஜெய்ப்பூர் அருகே நடந்த நிகழ்ச்சியில் கூறினார்.

சமீபத்தில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில், பா.ஜ.க. 241 இடங்களை மட்டுமே வெல்ல முடிந்தது, 2019 தேர்தலில் வென்ற 303 இடங்களிலிருந்து கணிசமான வீழ்ச்சி மற்றும் அதன் கணிக்கப்பட்ட 400-ஐ விட மிகக் குறைவு. கடந்த மூன்று பொதுத் தேர்தல்களில் பா.ஜ.க. தனிப்பெரும்பான்மை பெற முடியாமல் போனது இதுவே முதல் முறையாகும், இப்போது ஆட்சியை நடத்துவதற்கு அதன் கூட்டணிக் கட்சிகளை நம்பியிருக்கிறது.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், பா.ஜ.க.வை மறைமுகமாகத் தாக்க முற்பட்ட சில நாட்களுக்குப் பிறகு குமாரின் கருத்துகள் வந்துள்ளன. பிரதமர் நரேந்திர மோடியை மோகன் பகவத் கடுமையாக விமர்சித்துள்ளார்.

குமாரின் கருத்துக்கள் பகவத்தின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதோடு, குறிப்பாக மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக பா.ஜ.க.வும் ஆர்எஸ்எஸ்ஸும் சிறந்த உறவைப் பகிர்ந்து கொள்ளவில்லை என்ற செய்திகளுக்கு மத்தியில் இந்த கருத்துக்கள் வந்துள்ளன. வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்வதில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் இல்லாதது இந்தி பேசும் மக்களின் இதயத்தில் பா.ஜ.க. மோசமாகச் செயல்படுவதற்கு ஒரு காரணமாக பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவுப்படி

# ரூ.78.67 கோடியில் டெல்டா குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

**சென்னை, ஜீன் 16 -**

**டெல்டா விவசாயிகளைக் காக்கும் விதமாக ரூ.78.67 கோடி மதிப்பீட்டில் குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டத்திற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளதாக வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.**

**டெல்டா குறுவை சாகுபடி சிறப்பு தொகுப்புத் திட்டம் 2024 தொடர்பாக வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:**



வேளாண் உற்பத்தியை பெருக்கி உழவர் பெருமக்களின் நல்வாழ்வில் வளமை ஏற்படுத்திட பல முன்னோக்கு திட்டங்களை கடந்த மூன்றாண்டுகளில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில், உணவு உற்பத்தியை பெருக்கவும், உழவர் பெருமக்களின் வருமானத்தை அதிகமாக ஈட்டவும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் தொலைநோக்குத் திட்டங்களை இவ்வரசு அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

பருவ மழைகளால் நிரம்பப் பெறும் மேட்டூர் அணை நீர், தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகிய காவேரி டெல்டா மாவட்டங்களில் குறுவை பயிர் சாகுபடிக்காக ஜுன் 12ஆம் நாள் திறந்து விடப்படுவது மரபு. எதிர்பாராத சூழ்நிலைகளால் பருவமழை காலந்தாழ்த்தி இருப்பதால் இந்த ஆண்டு 2024 மேட்டூர் அணையில் போதிய நீர் இல்லாததால், டெல்டா சாகுபடிக்கு நீரை திறந்து விட கால தாமதம் ஏற்பட்டு உள்ளது.

இது மிகுந்த மனவேதனையை தந்தாலும் வேளாண்மை மக்களின் நலனை முன்நிறுத்தி, அவர்களின் நல்வாழ்வை மேம்படுத்தவும் குறுவை சாகுபடியாளர்களின் எதிர்பார்ப்பை கருத்தில் கொண்டும் டெல்டா விவசாயி களை காக்கும் விதமாக ரூ.78.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குறுவை சாகுபடித் தொகுப்பை உழவர் நலன் கருதி கீழ்க்கண்டவாறு வழங்கி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

1,00,000 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு, 2,000 மெட்ரிக் டன் நெல் விதைகள் மானிய விலையில் ரூபாய் 3.85 கோடி மதிப்பில் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் வழங்கப்படும்.

நெற்பயிர் இயந்திர நடவு பின்னேற்பு மானியமாக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.4 ஆயிரம் வீதம், 1 இலட்சம் ஏக்கர் பரப்பளவிற்கு தமிழ்நாடு அரசு ரூ.40 கோடி நிதி வழங்கப்படும்.

நுண்ணூட்டச் சத்து குறைபாடுள்ள 7,500 ஏக்கர் பரப்பளவில், நெல் நுண்ணூட்டக் கலவை 50 சதவீத மானியத்தில் விநியோகிக்க ரூ.15 இலட்சம் வழங்கப்படும். அதோடு, துத்தநாக சத்து குறைபாடு உள்ள இடங்களில், துத்தநாக சல்பேட் உரத்தை பயன்படுத்துவதற்கு, ஏக்கருக்கு 250 ரூபாய் வீதம், 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவுக்கு, 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், 25 ஆயிரம் ஏக்கரில் ஜிப்சம் பயன்படுத்துவதற்காக ஏக்கருக்கு மானியமாக 250 ரூபாய் வீதம் 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

பயறு வகைப் பயிர்களை 10,000 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்வதற்கு, 50 சதவீத மானியத்தில் தரமான விதைகள், சூடோமோனாஸ், திரவ உயிர் உரங்கள் மற்றும் இலை வழி உரம் தெளிக்கவும், ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் நிதியும், பயறுவகைப் பயிர்களில் மகசூல் திறனை அதிகரிக்க 50 சதவீத மானியத்தில் 10,000 ஏக்கருக்கு நுண்ணூட்டச்சத்து வழங்கிட ரூபாய் 20 இலட்சம் நிதியும் வழங்கப்படும்.

வேளாண்மை பொறியியல் துறை மூலம் விசை உழுவை, களையெடுக்கும் கருவி, விதை மற்றும் உரமிடும் கருவி, இயந்திரக் கலப்பை, சுழற் கலப்பை, சாகுபடிக் கலப்பை, பலதானியப் பிரித்தெடுக்கும் கருவி, ஆளில்லா வானூர்திக் கருவி மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்ப்செட் போன்ற 442 கருவிகள் வழங்கிட மானியமாக ரூ.7 கோடியே 52 இலட்சம் நிதி வழங்கப்படும்.

டெல்டா மாவட்டங்களில் வேளாண்பணியில் ஈடுபடுவோருக்கு ஏற்பட்டுள்ள வேலைவாய்ப்பு இழப்பினை ஈடுசெய்யும் பொருட்டு மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்புகளை வழங்க 24 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேற்கண்டவாறு, அரசு நிதியிலிருந்து நிதி பெற்றும், பல்வேறு திட்டங்களை ஒருங்கிணைத்தும், ரூ.78.67 கோடி மதிப்பீட்டில், குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தினை செயல்படுத்திட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்வாறு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

## குவைத் தீ விபத்தில் உயிரிழந்த

# 7 தமிழர்களின் உடல்கள் சொந்த ஊருக்கு அனுப்பி வைப்பு!

## கொச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான்- தமிழ்நாடு அரசு சார்பில் மரியாதை

கொச்சி, ஜுன் 16-

குவைத் தீ விபத்தில் உயிரிழந்த 7 தமிழர்கள் உள்பட 45 பேரின் உடல்கள் கொச்சி கொண்டுவரப்பட்டன. அங்கு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் தமிழ்நாடு அரசு சார்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மரியாதை செலுத்தினர்.

குவைத் நாட்டில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த 7 தமிழர்கள் உட்பட 45 இந்தியர்களின் உடல்கள் இந்திய ராணுவ விமானத்தின் மூலம் கொச்சி கொண்டு வரப்பட்டன. உயிரிழந்த தமிழர்களின் உடல்களைப் பெற, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கொச்சி சென்றார். கேரளாவைச் சேர்ந்த 23 பேர், தமிழ்நாட்டைச் சேர்ந்த 7 பேர், ஆந்திராவைச் சேர்ந்த மூவர், கர்நாடகாவைச் சேர்ந்த ஒருவரின் உடல்கள் கொச்சியில் ஒப்படைக்கப்பபட்டன. உயிரிழந்தவர்களின் உடல்களுக்கு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அஞ்சலி செலுத்தினார். தமிழ்நாடு அரசு சார்பில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மரியாதை செலுத்தினார்.

கொச்சி விமான நிலையத்திலிருந்து, 7 தமிழர்களின் உடல்களும் ஆம்புலன்ஸ்கள் மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. உயிரிழந்த தமிழர்களின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார். விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்கள் விரைந்து குணமடைய தேவையான உதவிகளை குவைத்தில் உள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து அயலகத் தமிழர் நலத்துறை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



கேரள மாநிலம், கொச்சி விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (14.6.2024) கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் குவைத் நாட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தமிழர்களின் உடல்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.